## திருத்த வரவு–செலவுத் திட்டம் 2016–2017
## சிறப்பம்சங்கள்

**கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்**
**உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி**
**(குறள் 390)**

- மாநிலத்தில் **அமைதி, வளம், வளர்ச்சி** என்ற குறிக்கோள்களை அடையவும், தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணத்தில் வகுக்கப்பட்ட இலக்குகளை அடையவும், மாநில அளவில் ஐந்து இயக்கங்களையும் (Missions), வளர்ச்சிக்கான பதினொன்று சிறப்பு நோக்கு பெரும் திட்டங்களையும் (Special Focus Areas of Development) இந்த அரசு வடிவமைத்துள்ளது.

- மாநில அளவிலான இந்த ஐந்து இயக்கங்கள்:

  - ➢ நீர் ஆதார மேலாண்மை மற்றும் குடிமராமத்து முறைக்கு புத்துயிரூட்டும் இயக்கம்
  - ➢ குடிசைகளற்ற கிராமங்களையும், குடிசைப்பகுதிகளற்ற நகரங்களையும் உருவாக்கிட வீட்டு வசதிக்கான மாநில இயக்கம்
  - ➢ வறுமை ஒழிப்பின் மூலம் ஏழைகளுக்குப் பொருளாதார உயர்வை வழங்குவதற்கான இயக்கம்
    - ➢ தூய்மைத் தமிழகத்திற்கான இயக்கம்
    - ➢ திறன் மேம்பாட்டிற்கான இயக்கம்

- வளர்ச்சிக்கான பதினொன்று சிறப்பு நோக்கு பெரும் திட்டங்கள்:

  - ➢ வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த முதன்மைத் துறைகளின் வளர்ச்சி
  - ➢ நகர்ப்புர உட்கட்டமைப்பை வலுப்படுத்துதல்
  - ➢ சுற்றுலாத் துறை மேம்பாடு
  - ➢ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவித்தல்
  - ➢ சாலைகள், மின்சாரம், சிறு துறைமுகங்கள், பாசனம், குடிநீர் போன்ற உட்கட்டமைப்பை மேம்படுத்த சிறப்புக் கவனம்
  - ➢ தொழில் வழித்தடம் மூலமாக முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் தொழில் தொடங்க உகந்த சூழலை மேம்படுத்துதல்
  - ➢ அனைவருக்கும் கல்வி, குறிப்பாக, கல்வித் தரத்திற்கான சிறப்புக் கவனம்
  - ➢ அனைவருக்கும் சுகாதாரம்
  - ➢ சமூகப் பாதுகாப்பு, குறிப்பாக, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலம் மீது சிறப்புக் கவனம்
  - ➢ நகர்ப்புரப் போக்குவரத்தினை வலுப்படுத்துதல்
  - ➢ நல்லாட்சி மற்றும் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துதல்

**வறுமை ஒழிப்பு**

✓ தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலமாக, பன்முனை அணுகுமுறைகளைப் பயன்படுத்தி, கிராமப்புறங்களிலும் நகர்ப்புரங்களிலும் வறுமை இல்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்க, இந்த அரசு வறுமை ஒழிப்பிற்கான மாநில இயக்கத்தைத் தொடங்கியுள்ளது.

✓ தமிழ்நாட்டில் 120 வட்டாரங்களில் 'புதுவாழ்வுத் திட்டம்' செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது தவிர, உலக வங்கியின் நிதியுதவியுடன், 900 கோடி ரூபாய் செலவில் 120 வட்டாரங்களில் 'தமிழ்நாடு கிராமப்புறப் புதுவாழ்வுத் திட்டம்' (Tamil Nadu Rural Transformation Project) செயல்படுத்தப்பட உள்ளது.

✓ இத்திட்டங்களோடு, 'தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கமும்', 'தேசிய ஊரக வாழ்வாதார இயக்கமும்' சேர்த்து, மொத்தம் 385 வட்டாரங்களிலும், அதாவது மாநிலம் முழுவதும், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

✓ கிராமப்புறப் பகுதிகளில் இத்தகைய வறுமை ஒழிப்பிற்கான திட்டங்களுக்கு, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 355.81 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ மாநிலம் முழுவதிலும் 'தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தினை' (Tamil Nadu Urban Livelihood Mission) மாநில அரசு அதன் வருவாய் ஆதாரங்களைக் கொண்டு செயல்படுத்தி வருகிறது. நகர்ப்புர வாழ்வாதாரத் திட்டங்களுக்காக, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 350 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு**

✓ தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணத்தின்படி, இரண்டு கோடி நபர்களுக்குத் திறன் பயிற்சி அளிக்க, மாநில திறன் மேம்பாட்டு இயக்கத்தை இந்த அரசு அமைத்துள்ளது.

✓ படித்த இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பினைப் பெருக்கும் நோக்குடன், கல்லூரிகள் மற்றும் கல்விக் கூடங்கள், தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதற்கான முயற்சிகள் ஊக்குவிக்கப்படும். திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளைத் திறம்பட அளித்து தொழில் நிறுவனங்களின் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் தேவையை நிறைவு செய்யவும், திறன் பயிற்சிக்கான அளவுகோல்களை வகுத்து அவற்றை தேசிய திறன் தகுதிக்கான அமைப்புடன் ஒருங்கிணைக்கவும், இத்தகைய இணைப்பு முயற்சிகள் பேருதவியாக அமையும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டில் இரண்டு இலட்சம் இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டிற்கான பயிற்சி அளிக்கப்படும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், திறன் மேம்பாட்டு இயக்கத்திற்காக 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 37 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில், மாவட்ட அளவிலான

தனியார் வேலைவாய்ப்பு உதவி மையங்கள் உருவாக்கப்பட்டு, அவை வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துவதுடன், நேர்காணல்களுக்கான உதவிகளையும் அளித்து வருகின்றன.

**திட்டம் மற்றும் வளர்ச்சி**

✓ தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணத்தின் இரண்டாவது பகுதி, துறைவாரியான அணுகுமுறைகளையும், ஆறு முக்கியத் துறைகளில் மேற்கொள்ளப்பட உள்ள 217 கட்டமைப்புத் திட்டங்களைப் பற்றிய குறிப்புகளையும் இந்த ஆவணம் எடுத்துரைத்துள்ளது. இவற்றில் 88 திட்டங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன, 16 திட்டங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட உள்ளன. மேலும், 24 திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகள் மற்றும் விரிவான சாத்தியக்கூறு ஆய்வறிக்கைகள் தயார் செய்யப்பட்டு துவங்கும் நிலையில் உள்ளன.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,000 கோடி ரூபாய் ‘தமிழ்நாடு தொழில் கட்டமைப்பு நிதியத்திற்கும்’, 100 கோடி ரூபாய் ‘திட்ட தயாரிப்பு நிதியத்திற்கும்’ ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ ஒரு சிறப்பு முயற்சியாக, தமிழ்நாடு தொழில் கட்டமைப்பு நிதிய மேலாண்மைக் கழகத்தின் (Tamil Nadu Infrastructure Fund Management Corporation) மூலமாக, நமது நாட்டிலேயே முதன்முறையாக, தமிழ்நாடு கட்டமைப்பு நிதியத்தை முதல்தர மாற்று முதலீட்டு நிதியமாக (Alternative Investment Fund Category-I) நமது மாநில அரசு உருவாக்கியுள்ளது. இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தால் (Securities and Exchange Board of India) இந்த நிதியம் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டு, முதல் கட்டமாக 3,000 கோடி ரூபாய் நிதியைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 2016–2017 ஆம் ஆண்டில், மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் புதிய கட்டமைப்புத் திட்டங்களுக்காக இந்நிதி ஆதாரங்கள் பயன்படுத்தப்படும்.

✓ 2011–2012 ஆம் ஆண்டின் நிலையான விலைகளின்படி, 2015–2016 ஆம் ஆண்டிற்கான தேசிய அளவிலான பொருளாதார வளர்ச்சி விகிதம், 7.57 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ள போதிலும், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 8.79 சதவீதமாகக் கணிக்கப்பட்டுள்ளது.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான மாநிலத் திட்டச் செலவுகளுக்கான இலக்கு 60,610 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது

✓ வறுமை, சுகாதாரம், கல்வி, பாலின ஏற்றத்தாழ்வு போன்ற குறியீடுகளில் பின்தங்கியுள்ள 105 வட்டாரங்களில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும் திட்டமான, ‘மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியம்’ (State Balanced Growth Fund) தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இந்த நிதியத்திற்காக

100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ மத்திய அரசால் கைவிடப்பட்டுள்ள 'மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்' மற்றும் 'மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்' ஆகியவற்றிற்கு மாற்றாக, மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரங்களின் மூலமாக தொடங்கப்பட்ட 'சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்' (Special Area Development Programme), 2016–2017 ஆம் ஆண்டிலும் 75 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

✓ நிர்வாகத்தில் புது முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக, இந்த அரசால் உருவாக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வரும் 'தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டம்' (Tamil Nadu Innovation Initiatives) தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்தகைய புதுமையான முயற்சிகளை மேற்கொள்ள, 250.49 கோடி ரூபாய் செலவில் 115 திட்டங்கள் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்கு 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்மொழி வளர்ச்சி**

✓ புகழ்பெற்ற பெண் எழுத்தாளர்களுக்கான 'அம்மா இலக்கிய விருது', உலகளவில் சிறந்த தமிழறிஞர்களுக்கான 'உலகத் தமிழ்ச் சங்க விருது', சிறந்த மொழிபெயர்ப்பாளர்களுக்கான 'சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது' ஆகிய விருதுகள் ஏற்கெனவே அறிவித்தபடி இந்த ஆண்டு முதல் வழங்கப்படும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தமிழ் வளர்ச்சித் துறைக்கு 32.94 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சாலைப் பாதுகாப்பு**

✓ 2016–2017ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சாலைப் பாதுகாப்பு நிதிக்காக, மொத்தம் 165 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ மேலும், அதிக அளவில் விபத்துக்கள் நிகழக்கூடிய இடங்களில், சாலைக் குறைபாடுகளைச் சரி செய்ய, ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சாலைப் பாதுகாப்பிற்கென தனியாக 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சட்டம் ஒழுங்கு**

✓ 'அமைதி, வளம், வளர்ச்சி' என்ற இந்த அரசின் மும்முனைக் கொள்கையில், தமிழகத்தில் அமைதிச் சூழல் நிலவச் செய்வதுதான் முதன்மைக் கொள்கையாகும்.

✓ காவல் துறையினரின் தேடுதல் வேட்டைகள், சிறப்பான நுண்ணறிவுத் தகவல் அமைப்பு மற்றும் 10 எல்லையோர மாவட்டங்களில் நக்சலைட் பிரிவினரைத் தடுக்க சிறப்புப் பணிப் பிரிவு அமைத்தல் போன்ற நடவடிக்கைகளினால், இடதுசாரி தீவிரவாத சக்திகள் ஒடுக்கப்பட்டுள்ளன.

✓ நாட்டிலேயே முதன்முறையாக, தமிழ்நாட்டில் தான் 13 கடலோர மாவட்டங்களில், 500 மீனவ இளைஞர்கள் கடற்கரை ஊர்க்காவல் படைக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

✓ அனைத்துக் காவல் நிலையங்களும் அரசுக் கட்டடத்தில் இயங்குவதை இந்த அரசு உறுதி செய்யும் நோக்குடன், தனியார் கட்டடங்களில் செயல்பட்டு வரும் 64 காவல் நிலையங்களுக்கும் புதிதாக சொந்தக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். பாதுகாப்பு, தகவல் தொடர்பு மற்றும் கண்காணிப்பிற்கான உபகரணங்கள், வாகனங்கள் போன்றவற்றை வழங்குவதற்கு, 'காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்' கீழ், இந்த அரசு ஏற்கெனவே 50.10 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்துள்ளது. 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்திற்காக 68.62 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 'குற்றங்களையும் குற்றவாளிகளையும் கண்காணிக்கும் கணினி இணைப்புத் திட்டத்தின்' (Crime and Criminal Tracking Network System) கீழ், மாநிலம் முழுவதும் உள்ள 1,482 காவல் நிலையங்களும், 479 காவல் துறை உயர் அலுவலகங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர, மாநில நிதியில் 938 சிறப்பு அலகுகளையும் இந்தத் திட்டத்தில் சேர்ப்பது உள்ளிட்ட பணிகளுக்கு, 22.14 கோடி ரூபாய்க்கு இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

✓ காவல் துறையினரின் வீட்டுவசதித் தேவைகளை நிறைவு செய்வதற்காக, 422 கோடி ரூபாய் செலவில் 2,673 வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் 2016–2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், காவல் துறைக்கு மொத்தமாக 6,102.95 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**

✓ இத்துறைக்கென, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 230.07 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறைச்சாலைகள்**

✓ சிறைச்சாலைகள் துறைக்கு, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 282.92 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நீதி நிர்வாகம்**

✓ நீதிமன்றங்கள் சீராகவும் செம்மையாகவும் செயல்பட, நீதிமன்றக் கட்டமைப்பு வசதிகள் பெருமளவு மேம்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில், 223 புதிய நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு, 486.26 கோடி ரூபாய் செலவில் புதிய நீதிமன்றக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், கூடுதல் நீதிபதிகளுக்கும், தேவையான ஊழியர்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

✓ சென்னையில் மாநில நீதித்துறை பயிற்சிக் கழகத்தை அமைத்துள்ளதுடன், கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் அதன் மண்டல மையங்கள், 28.10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு சிறப்பு முயற்சியாக நீதிமன்றப் பதிவுருக்களை கணினிமயமாக்குவதற்கு 9.43 கோடி ரூபாய்க்கு ஒப்பளிக்கப்பட்டு அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நீதி நிர்வாகத்திற்கு 993.24 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நிர்வாக ஆளுமை**

✓ இ–சேவை மையங்களின் மூலம், தற்போது அளிக்கப்பட்டு வரும் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுச் சேவைகளின் எண்ணிக்கை, நடப்பு ஆண்டில் 300 வரை உயர்த்தப்படும்.

✓ தற்போது அமைக்க திட்டமிடப்பட்டுள்ள லோக் ஆயுக்தா அமைப்பு, தூய நிர்வாகத்தையும், பொறுப்புடைமையையும் உறுதி செய்து, நிர்வாகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

✓ 'மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம்' (State Resident Data Hub) அமைக்கும் நடவடிக்கைகள் முடியும் தருவாயில் உள்ளன. மேலும், எதிர்காலத்தில் ஆதார் எண்ணை அடிப்படையாகக் கொண்டு நலத் திட்டப் பயன்கள் மக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்யவும் இந்தத் தகவல் தொகுப்பு மையம் பேருதவியாக அமையும்.

**வருவாய் நிர்வாகம்**

✓ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் இந்த அரசு, கடந்த ஐந்து ஆண்டுகளில் 65 புதிய வட்டங்களையும், ஒன்பது புதிய வருவாய்க் கோட்டங்களையும் உருவாக்கியுள்ளது.

✓ வருவாய்த் துறையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, 15 வட்டாட்சியர் அலுவலகங்கள், 5 கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் காஞ்சிபுரத்தில் நிலஅளவைத் துறை உதவி இயக்குநர் அலுவலகம் ஆகிய அலுவலகங்களுக்கான புதிய கட்டடங்கள் 51.57 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

✓ குறிப்பிட்ட வட்டங்களில் சோதனை முறையில் செயல்படுத்தப்பட்ட நவீன கணினி பட்டா மாற்ற முறை (Online Patta Transfer), மாநிலம் முழுவதுமாக விரைவில் செயல்படுத்தப்படும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டில் 3.50 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் இந்த அரசால் வழங்கப்படும்.

✓ நிலம் குறைவாகவும், நிலமதிப்பு அதிகமாகவும் உள்ள இடங்களில், வீடில்லா குடும்பங்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டித் தருவதற்காக, கூட்டுப் பட்டா வழங்கும் ஒரு புதிய அணுகுமுறையை இந்த அரசு மேற்கொள்ளும். வீட்டின் கட்டட வடிவமைப்பில் ஒரு நெகிழ்வுத் தன்மையைப் பின்பற்றி, ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் இத்தகைய கூட்டுப்பட்டா நிலங்களில் அடுக்குமாடி வீடுகள் கட்டித் தரப்படும்.

✓ உயர்த்தப்பட்ட நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் ‘முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்’, விவசாயிகளுக்குப் பாதுகாப்பையும் பேராதரவையும் அளித்து வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து 2015–2016 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், 3,039 கோடி ரூபாயை 37.67 இலட்சம் பயனாளிகளுக்கு நிதியுதவியாக இத்திட்டத்தில் அரசு அளித்துள்ளது.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்காக 206 கோடி ரூபாயும், வருவாய்த் துறைக்காக மொத்தம் 5,686 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேளாண்மை மற்றும் கூட்டுறவு**

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான உணவு தானிய உற்பத்தி இலக்கை 147 இலட்சம் மெட்ரிக் டன்னாக இந்த அரசு நிர்ணயித்துள்ளது.

✓ 2016–2017 ஆம் ஆண்டில், 27.50 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் திருந்திய நெல் சாகுபடி முறையும் (System of Rice Intensification), 43,688 ஏக்கர் நிலப்பரப்பில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறையும் (Sustainable Sugarcane Initiative) விரிவாக்கம் செய்யப்படும். பருத்தி மற்றும் காய்கறி சாகுபடியில் துல்லியப் பண்ணைய முறை ஊக்குவிக்கப்படும்.

✓ தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை நிறைவு செய்யும் வகையில், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க, சிறப்புக் கவனம் செலுத்தும் வகையில், மானாவாரி நில விவசாயத்திற்கு ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படும். நீர் ஆதாரங்களை மேம்படுத்தி, மழைநீரைச் சேமித்து, விரயமின்றி பயன்படுத்தும் வழிமுறைகள் இத்திட்டத்தின் முக்கியக் கூறாக விளங்கும். பண்ணை அளவிலான வருவாயைப் பெருக்க, கறவை மாடுகள் மற்றும் கோழிகள் வளர்ப்பை உள்ளடக்கிய கலப்புப் பண்ணைய முறை மானாவாரிப் பகுதிகளில் ஊக்குவிக்கப்படும்.

✓ பாசன வசதிகளைக் கொண்ட நிலங்களில், பச்சைப் பயறு, உளுந்து, துவரை போன்ற பயறுவகை சாகுபடியினை ஊக்குவித்து, பயறு உற்பத்தியில் தன்னிறைவுக்கான ஒரு சிறப்புத் திட்டம் இந்த ஆண்டில் துவங்கப்படும். பயறு உற்பத்தியில் 9.80 இலட்சம் மெட்ரிக் டன் அளவை அடையும் நோக்கத்துடன், 27.50 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயறு சாகுபடி மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது

✓ 2016–2017 ஆம் ஆண்டில், வேளாண் பயிர்கள் பயிரிடப்படவுள்ள 28,540 ஏக்கர் பரப்பிலும், தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடப்படவுள்ள 86,707 ஏக்கர் பரப்பிலும் நுண்ணீர்ப் பாசன முறை 319 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

✓ கனரக இயந்திரங்கள் வேளாண் பொறியியல் துறையின் மூலம் வாங்கப்பட்டு பயன்படுத்தப்படும். விவசாயிகளுக்கு அதிகபட்சமாக 50 சதவீத மானியத்தில் பண்ணை இயந்திரங்கள் வாங்கிட வழிவகை செய்யப்படும்.

✓ கிராமப்புற இளைஞர்களுக்கு 40 சதவீத மானியத்தில் வேளாண் இயந்திரங்களை வழங்கி, அவற்றை வாடகைக்கு வழங்கும் மையங்களை அமைக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும். இதுவரை, 20.99 கோடி ரூபாய் செலவில் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் 212 மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2016–2017 ஆம் ஆண்டில், மேலும் 32.45 கோடி ரூபாய் செலவில் 324 மையங்கள் அமைக்கப்படும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கு, பண்ணை இயந்திரமயமாக்கல் திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ அடுத்த ஐந்து ஆண்டுகளில், காய்கறிகள் மற்றும் பழங்களுக்கான சாகுபடிப் பரப்பு, தற்போதுள்ள 13.85 இலட்சம் ஏக்கரிலிருந்து, 16 இலட்சம் ஏக்கராக அதிகரிக்கப்படும்.

✓ வணிகரீதியாக அதிக வருவாயை ஈட்டித் தரக்கூடிய பயிர்களில் ஒன்றான கொக்கோ பயிரை, அதற்கு உகந்த வேளாண் தட்பவெப்ப நிலை கொண்ட பகுதிகளிலும், தென்னந் தோப்புகளில் பல அடுக்கு ஊடுபயிராகவும் பயிரிட ஊக்குவிக்கப்படும்.

✓ தோட்டக்கலைத் துறைக்கென, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 518.19 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ மேலும், விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் உரங்களை வழங்குவதற்காக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு (TANFED) சுழல் நிதியாக 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

✓ பழங்கள், காய்கறிகள் போன்ற விரைவில் அழுகக்கூடிய விளைபொருட்களை, உற்பத்தி முதல் சந்தைப்படுத்துதல் வரையிலான விநியோகச் சங்கிலித் தொடர் மேலாண்மைக்காக ஒரு சிறப்புத் திட்டத்தை, 10 மாவட்டங்களில் 398.75 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

✓ வேளாண் பொருட்களுக்கான சந்தைகளின் செயல்திறனை மேம்படுத்த, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் (Tamil Nadu Agricultural Produce Marketing (Regulation) Act) 1987–ல் தேவையான திருத்தங்கள் கொண்டுவரப்படும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 'பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்திற்கு' (Pradhan Mantri Fasal Bima Yojana) 239.51 கோடி ரூபாய் மாநில அரசின் பங்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு 31.03.2016 அன்று வரை செலுத்த வேண்டிய குறுகியகாலப் பயிர்க் கடன்கள், நடுத்தரகால மற்றும் நீண்டகால விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

✓ இதன்படி தள்ளுபடி செய்ய வேண்டிய கடன் மற்றும் வட்டி உள்ளிட்ட மொத்தத் தொகை **5,780.92** கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தள்ளுபடியால் **8,35,360** குறு மற்றும் **8,58,785** சிறு விவசாயிகள் பயன் பெறுவார்கள்.

✓ இந்தக் கூட்டுறவுக் கடன் தள்ளுபடித் திட்டத்திற்காக, **2016–2017** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **1,680.73** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், **2016–2017** ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகள் மூலம் **6,000** கோடி ரூபாய் புதிய பயிர்க்கடன்கள் வழங்கப்படும்.

**கால்நடை பராமரிப்பு**

✓ 'விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம்', கறவைப் பசுக்களுக்கான அலகுத் தொகை **30,000** ரூபாயிலிருந்து **35,000** ரூபாயாக உயர்த்தப்படும். இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த, **2016–2017** ஆம் ஆண்டில் **12,000** ஏழைப் பெண்களுக்கு **12,000** கறவைப் பசுக்களும், ஒரு இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு நான்கு இலட்சம் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகளும் வழங்கப்படும்.

✓ இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, **2016–2017** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **182.33** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தீவன உற்பத்தித் திட்டத்திற்காக, **2016–2017** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **25** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ **2016–2017** ஆம் ஆண்டில், **100** கால்நடை கிளை மையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு, அவற்றுக்குத் தேவையான கட்டட வசதிகளும் ஏற்படுத்தப்படும். கால்நடை பராமரிப்புத் துறையின் கட்டமைப்பு வசதிகளை நபார்டு வங்கி நிதியுதவியுடன் வலுப்படுத்துவதற்காக, **2016–2017** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **90.27** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ கோழிப் பண்ணை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பழங்குடியினர் வாழும் பகுதிகளிலும், வறட்சியான பகுதிகளிலும் கறிக்கோழிப் பண்ணைகளையும், நாட்டுக் கோழிப் பண்ணைகளையும் ஊக்குவிக்க, **25** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ **2016–2017** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், கால்நடை பராமரிப்புத் துறைக்காக **1,188.97** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பால்வளம்**

✓ கடந்த ஐந்து ஆண்டுகளில், பல்வேறு திட்டங்களின் கீழ், **593.65** கோடி ரூபாய் செலவில் பால்வளத் துறைக்கான பல்வேறு கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

✓ தென் மாவட்டங்களில், பால்வளத்தை ஊக்குவிக்க **45** கோடி ரூபாய் செலவில், புதிய பால்

பொருட்களைத் தயாரிக்கும் அலகு ஒன்று மதுரையில் அமைக்கப்படும். இதன் மூலம், ஐஸ்க்ரீம் உட்பட பல்வேறு பால் பொருட்கள் தயாரிக்கப்படும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பால்வளத் துறைக்கு 121.69 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மீனளம்**

✓ மீன்பிடித் தடைக் காலத்தில், மீன்பிடி குறைவாக உள்ள காலத்தில் வழங்கப்பட்டு வரும் நிவாரண உதவிகள், குடும்பம் ஒன்றிற்கு 5,000 ரூபாயாக இனி உயர்த்தி வழங்கப்படும். இவைபோன்ற நிவாரண உதவித் திட்டங்களைச் செயல்படுத்த, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 223 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ சூரை மீன்பிடித் தூண்டில் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 2016–2017 ஆம் ஆண்டில் 14.32 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

✓ ஆபத்தான கால கட்டங்களில் மீனவர்களை எச்சரிக்கை செய்வதற்காக, 48 கோடி ரூபாய் செலவில், 30,000 அவசரகாலத்
தகவல் அனுப்பும் கருவிகள் (Distress Alert Transmitters) மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. உலக வங்கி நிதியுதவியுடன், 62.14 கோடி ரூபாய் செலவில் தொலைத் தொடர்பு வசதிகளையும், உயர் அதிர்வெண் (VHF) தொடர்பு சாதனங்களையும், அனைத்து மீன்பிடிப் படகுகளுக்கும் வழங்க உரிய நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

✓ திருவள்ளூர், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், நான்கு மீன் பதப்படுத்தும் பூங்காக்கள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

✓ இது தவிர, மீன் இறங்கு தளங்களை மேம்படுத்தும் பணிகளுக்காக, 209.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மீனளத் துறைக்கு மொத்தமாக 743.79 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுச்சூழல் மற்றும் வனம்**

✓ கால்வாய் கரையோரங்களிலும், படுகை நிலப் பகுதிகளிலும், வனப்பகுதிக்கு வெளியில் உள்ள பகுதிகளிலும் தேக்கு மரங்கள் மற்றும் இதர மரங்கள் வளர்ப்பின் மூலம், மாநிலத்தின் பசுமைப் பரப்பளவு மேம்படுத்தப்பட்டு வருகிறது. 2016–2017 ஆம் ஆண்டு தொடங்கி அடுத்த ஐந்தாண்டுகளில், தஞ்சாவூர், திருவாரூர், திருச்சி, மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 52.64 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

✓ ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை (JICA) உதவியுடன் செயல்படுத்தப்படும் 'தமிழ்நாடு பல்லுயிரினப் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டத்திற்கு' 2011–2012 முதல் 2015–2016 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் 339.18 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இந்த திருத்த வரவு–செலவுத் திட்ட

மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக 109.51 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ பள்ளிக்கரணை சதுப்பு நில சுற்றுச்சூழல் மீட்டெடுப்புப் பணிகளும், மாதவரம், அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகளைச் சீரமைப்பது போன்ற சுற்றுச்சூழலை மீட்டெடுக்கும் பணிகளும் மொத்தம் 74.93 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

✓ சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள அனைத்து நீர்நிலைகளிலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நிதியைப் பயன்படுத்தி, இது போன்ற சீரமைப்புப் பணிகளை படிப்படியாக இந்த அரசு மேற்கொள்ளும்.

✓ 24.58 கோடி ரூபாய் செலவில் 'வைகை மற்றும் நொய்யல் ஆறுகளுக்குப் புத்துயிரளித்தல்' என்ற புதிய திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும்.

✓ வன விலங்குகளின் தாக்குதலால் ஏற்படும் உயிரிழப்பு, பயிர்ச் சேதம், உடைமைகளுக்கு ஏற்படும் சேதம் போன்றவற்றிற்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை, மாநிலப் பேரிடர் நிவாரண நிதி (SDRF) விதிமுறைகளுக்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறைக்கு 652.78 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நீர்வள ஆதாரங்கள் மற்றும் பாசனம்**

✓ நீர் ஆதாரங்களைப் பயன்படுத்துவோரின் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும் குடிமராமத்து முறைக்கு புத்துயிரூட்டுவதற்காகவும், நீர்நிலைகளை மீட்டெடுப்பதற்காகவும், இந்த அரசு நீர் ஆதார மேலாண்மைக்கு மாநிலம் தழுவிய இயக்கத்தை மேற்கொள்ளும்.

✓ குடிமராமத்து முறைக்கு புத்துயிரூட்டுவதற்காக, முதல் கட்டமாக 100 கோடி ரூபாய் ஊக்க நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வருங்காலத்தில் நபார்டு வங்கி உதவியுடன் இந்த நிதி கணிசமான அளவிற்கு உயர்த்தி வழங்கப்படும்.

✓ நிரந்தர வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை கடலூர் மாவட்டத்தில் மேற்கொள்ள, வடிகால்களை அகலப்படுத்துதல், வாய்க்கால்களின் வரப்புகளையும், நதிக் கரைகளையும் பலப்படுத்துதல் போன்ற வெள்ளத் தடுப்புப் பணிகளை 140 கோடி ரூபாய் செலவில் நபார்டு வங்கி நிதியுதவியுடன், 2016–2017 ஆம் ஆண்டில் இந்த அரசு மேற்கொள்ளும்.

✓ எளிதாக பாதிப்புக்குள்ளாகக்கூடிய சென்னை போன்ற கடலோர மாவட்டங்களுக்காக, விரிவான வெள்ளப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை இந்த அரசு தயாரித்து வருகிறது. இத்திட்டங்கள் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

✓ இந்த நிதியாண்டில் நபார்டு வங்கி உதவியுடன் வெள்ளத் தடுப்பு மற்றும் நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக,

445.19 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ புனரமைக்கப்பட வேண்டிய 105 அணைகளுள், 66 அணைகளில், பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன. இந்த திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்காக 258.46 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் 'பருவநிலை மாற்றத் தழுவல் திட்டத்தின்' முதற்கட்டமாக, வெண்ணாறு உப வடிநிலப் பகுதியில் 279 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

✓ 2,950 கோடி ரூபாய் செலவில் நீர்வள நிலவளத் திட்டத்தின் (Irrigated Agriculture Modernisation and Water-Bodies Restoration and Management Project) இரண்டாம் கட்டத்திற்கான (Phase-II) பணிகள் உலக வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்பட உள்ளன.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நீர்வள ஆதாரங்கள் துறைக்கு 3,406.69 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நெடுஞ்சாலைத் துறை**

✓ 2016–2017 ஆம் ஆண்டில் 'ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்' (CRIDP) கீழ் 1,000 கிலோமீட்டர் சாலைகளை அகலப்படுத்தும் பணிகளும், 3,000 கிலோமீட்டர் சாலைகளை மேம்படுத்துவதற்கான பணிகளும் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்காக, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 'செயல்பாடு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்த முறையின்' (Performance Based Maintenance Contract) கீழ் பொள்ளாச்சி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் திருவள்ளூர் கோட்டங்களில் மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கிய மாவட்டச் சாலைகளை வலுப்படுத்தவும், பராமரிக்கவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டிலும் இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துவதற்காக, ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 437 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ மேலும், 2016–2017 ஆம் ஆண்டில் சாலைகள் மற்றும் பாலங்களை மேம்படுத்தும் பணிகளை, 300 கோடி ரூபாய் செலவில் நபார்டு வங்கியின் கடனுதவியுடன் இந்த அரசு மேற்கொள்ளும்.

✓ நடப்பு நிதியாண்டில், 12 சாலை மேம்பாலங்கள் மற்றும் சாலை சுரங்கப் பாலங்கள் 375.17 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட உள்ளன.

✓ போக்குவரத்து நெருக்கடி மிகுந்த முக்கியமான இடங்களில் நெரிசலைக் குறைப்பதற்காக, 320 கோடி ரூபாய் செலவில் சேலம் மாநகரில் உள்ள ஐந்து சாலைகள் சந்திப்பு, 111.40 கோடி ரூபாய் செலவில் ஏ.வி.ஆர்.ரவுண்டானா மற்றும் குரங்குச்சாவடி சந்திப்புகள், 26.77 கோடி ரூபாய் செலவில் திருவாகவுண்டனூர்

சந்திப்பு மற்றும் 121.82 கோடி ரூபாய் செலவில் கோயம்புத்தூரில் உள்ள ஆத்துப்பாலம் மற்றும் உக்கடம் சந்திப்பு முதல் ஒப்பணக்காரத் தெரு வரை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மேம்பாலங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

✓ உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் 'தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்' (TNRSP) இரண்டாவது கட்டத்தின் கீழ், 30 கிலோமீட்டர் நீளமுள்ள மேட்டுப்பாளையம்–ஈரோடு நெடுஞ்சாலை, 70 கிலோமீட்டர் நீளமுள்ள ஒட்டன்சத்திரம்–திருப்பூர் நெடுஞ்சாலை மற்றும் 46 கிலோமீட்டர் நீளமுள்ள திருநெல்வேலி–கொல்லம் நெடுஞ்சாலை ஆகிய மாநில நெடுஞ்சாலைகள், அரசு–தனியார் பங்களிப்பு முறையில் 1,541 கோடி ரூபாய் செலவில் நான்குவழிச் சாலைகளாகத் தரம் உயர்த்தப்படும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டங்களுக்காக 1,220.28 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொது விநியோகத் திட்டம்**

✓ பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகளை கணினி மயமாக்குவதற்காகவும், குடும்ப அட்டை தகவல் தொகுப்பினை ஆதார் எண்ணுடன் ஒருங்கிணைப்பதற்காகவும், 318.40 கோடி ரூபாய் செலவில் கணினிமயமாக்கும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**எரிசக்தி**

✓ மாநில மற்றும் மத்திய அரசுகளின் மின்சார உற்பத்தி முகமைகளின் மூலமாகவும், நீண்டகால, குறுகியகால மின் கொள்முதல் ஒப்பந்தங்களின் மூலமாகவும், சூரியஒளி மின் கொள்முதல் மூலமாகவும், கடந்த ஐந்து ஆண்டுகளில், 8,432.50 மெகாவாட் கூடுதல் மின்சாரம் பெறப்பட்டுள்ளது.

✓ தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதியின்படி, அடுத்த ஐந்து ஆண்டுகளில் 13,000 மெகாவாட் அனல் மின்சாரமும், 2,500 மெகாவாட் புனல் மின்சாரமும், 3,000 மெகாவாட் சூரிய மின்சக்தியும் மாநிலத்தின் தற்போதைய மின் உற்பத்தித் திறனுடன் கூடுதலாகச் சேர்க்கப்படும்.

✓ ஜெர்மன் வங்கி உதவியுடன் பசுமை ஆற்றல் மின்தொடர் திட்டம் 1,593 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 5,014 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு மின்தொடரமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறப்பாக நடைபெற்று வரும் இத்திட்டங்களுக்காக, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,738 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 191 இலட்சம் நுகர்வோர்கள் பயன்பெறும் வகையில், அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட்டுகள் வரை கட்டணமில்லா

மின்சாரம் வழங்கி தமது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளார்கள். இந்த அறிவிப்பின் மூலம், அரசுக்கு ஆண்டுதோறும் 1,607 கோடி ரூபாய் அளவிற்கு கூடுதல் நிதிச்சுமை ஏற்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதியின்படி கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கட்டணமில்லா மின்சாரம், முறையே, 200 யூனிட்டுகள் மற்றும் 750 யூனிட்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. மின்சாரத்திற்கான மானியத்திற்கு மட்டும் நடப்பு நிதியாண்டில் 9,007 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ நிதி சீரமைப்புத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் (TANGEDCO) கடனை அரசு ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, அதைத் திரும்பச் செலுத்துவதற்காக, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எரிசக்தித் துறைக்கு 13,856 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**போக்குவரத்து**

✓ 2016–2017 ஆம் ஆண்டில் பழைய பேருந்துகளை மாற்ற, 2,000 புதிய பேருந்துகளை வாங்குவதற்குப் பங்கு மூலதன உதவியாக 150 கோடி ரூபாயும், கடனுதவியாக 125 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணமின்றிப் பயணிப்பதற்காக, 'மூத்த குடிமக்களுக்கான பேருந்துப் பயண அட்டைத் திட்டத்தின்' கீழ், இதுவரை 2.49 இலட்சம் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

✓ நடப்பு நிதியாண்டில், மாணவர் பயணச் சலுகைக் கட்டண மானியமாக 505.35 கோடி ரூபாயும், டீசலுக்கான மானியமாக 200 கோடி ரூபாயும் இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் போக்குவரத்துத் துறைக்காக, 1,295.08 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுலா**

✓ நீர் விளையாட்டுகள், ஹெலி–சுற்றுலா போன்ற புதிய சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களை ஊக்குவிப்பதுடன், தற்போதுள்ள பாரம்பரியச் சுற்றுலா, சமயச் சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா போன்ற பல்வேறு சுற்றுப்பயணத் திட்டங்களும் ஊக்குவிக்கப்படும்.

✓ உலகப்புகழ் பெற்ற சுற்றுலாத் தலங்களில், தல அருங்காட்சியகங்களும் (Site Museums), தகவல் மையங்களும் அமைக்கப்படும்.

✓ ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் 'தமிழ்நாடு சுற்றுலா உட்கட்டமைப்பு மேம்பாட்டு முதலீட்டுத் திட்டத்தின்' கீழ், 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 53.20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சுற்றுலாத் துறைக்கு மொத்தம் 85.80 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இந்து சமய அறநிலையத் துறை**

✓ மாநிலத்திலுள்ள 724 கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அன்னதானத் திட்டம், 2016–2017 ஆம் ஆண்டில் மேலும் 30 கோயில்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

✓ நடப்பு நிதியாண்டில் 10 கோடி ரூபாய் செலவில் 500 கிராமக் கோயில்களிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள 500 கோயில்களிலும் பழுது நீக்கவும், புதுப்பிக்கவும் உரிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

**தகவல் தொழில்நுட்பவியல்**

✓ 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டைத் தொடர்ந்து, அமெரிக்க நிறுவனமான ஃபோர்டு மோட்டார்ஸ் கம்பெனி தனது ஆராய்ச்சி மையத்தை சென்னையில் நிறுவுவதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

✓ தென் தமிழகத்தில், தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டுக்கு இந்த அரசு எடுத்துவரும் பல்வேறு முயற்சிகளால், ஹனிவெல், ஹெச்.சி.எல். டெக்னாலஜிஸ், ஜோஹோ நிறுவனம், சின்டெல் போன்ற நிறுவனங்கள், தென் தமிழ்நாட்டில் தங்களது அலுவலக வளாகங்களை அமைத்து வருகின்றன.

✓ 2016–2017 ஆம் ஆண்டிலும் 5.35 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படுவதன் மூலம், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்காக 890 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழில் வளர்ச்சி**

✓ மாநிலத்தில் முதலீட்டிற்கான சூழலை மேம்படுத்துவதற்கு, 'தமிழ்நாடு முதலீடு ஊக்குவிப்புத் திட்டத்தின்' இரண்டாம் கட்டத் திட்டத்தினைச் (Tamil Nadu Investment Promotion Programme Phase-II) செயல்படுத்த, 1,560 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்க ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை இசைவளித்துள்ளது.

✓ 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டு, இதுவரை, 23,258 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் செய்யப்பட்டு, 48,145 நபர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

✓ ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது போல, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்படும். அடுத்த மாநாடு 2017 ஆம் ஆண்டில் நடைபெற உள்ளது.

✓ மதுரை–தூத்துக்குடி தொழில் வழித்தடத் திட்டம், ஒரு இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் 25,000 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை ஈர்த்திட உதவும்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முன்முயற்சியாக, மதுரை–தூத்துக்குடி தொழில் வழித்தட மேம்பாட்டுக் கழகம் எனும் சிறப்பு நோக்கு முகமையை சிப்காட் நிறுவனம் அமைத்துள்ளதுடன், இத்திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தும் பணிகளையும் விரைவுபடுத்தியுள்ளது.

✓ சென்னை–பெங்களூரு தொழில் வழித்தடத் திட்டத்தின் கீழ், பொன்னேரி தொழில் முனையத்தை தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலமாக (NIMZ) மேம்படுத்துவதற்கான பணிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் (TIDCO), சிப்காட் நிறுவனத்துடன் இணைந்து, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் சுமார் 306 ஏக்கர் பரப்பளவில் பாலிமர் தொழிற் பூங்காவினை 294 கோடி ரூபாய் செலவில் அமைத்து வருகிறது. இப்பூங்காவில், சிறு மற்றும் நடுத்தர பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்யும் 84 அலகுகள் இடம் பெறும்.

✓ ஸ்ரீபெரும்புதூர் வட்டம், வல்லம் வடகாலில் அமைந்துள்ள சிப்காட் தொழிற் பூங்காவில் சுமார் 250 ஏக்கர் பரப்பளவில் வான்வெளிப் பூங்கா (Aerospace Park) அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வானூர்தி வடிவமைப்பு, வானூர்திகளுக்கான உதிரிப் பாகங்கள் தயாரிப்பு, பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் வசதிகளுடன் இப்பூங்கா செயல்படும்.

✓ இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தொழிற் துறைக்காக 2,104.49 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள்**

✓ உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கையெழுத்திடப்பட்ட 10,073 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இதுவரை, 3,029 ஒப்பந்தங்கள் மூலம் 2,599.93 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் பெறப்பட்டுள்ளன.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கு, வட்டி மானியத்திற்காக 12 கோடி ரூபாயும், கட்டமைப்பிற்கான நிதியுதவியாக 60 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின் கீழ், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மட்டும் 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் மொத்தமாக இத்திட்டத்திற்கு 30 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ முதல் தலைமுறை தொழில் முனைவோரை ஊக்கப்படுத்த, இந்த அரசால் தொடங்கப்பட்ட முன்னோடித் திட்டம் 'புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் மேம்பாட்டுத் திட்டம்' (New Entrepreneurship-cum-Enterprise Development Scheme) ஆகும். தமிழகத்தில் புதிய தொழில் தொடங்குவதற்கான துடிப்பான சூழலை (Vibrant Start-up Environment) ஏற்படுத்துவதற்காக, ஒரு கோடி ரூபாயை இதற்கென இத்திட்டத்தில் ஒதுக்கி 'ஆரம்ப செயல்திட்ட' நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அவற்றை கல்வி நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–

செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறைக்கு, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 348.22 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை**

✓ இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், விலையில்லா சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டத்திற்காக 487.45 கோடி ரூபாயும், தள்ளுபடி மானியத்திற்காக 78.45 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்காக 1,129.74 கோடி ரூபாயும், கைத்திறன் மற்றும் கதர்த் துறைக்காக 174.27 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சி**

✓ மாநில நிதிக்குழு மானியங்களின் மூலம் கிடைக்கப்பெறும் நிதி ஆதாரங்களை ஒருங்கிணைத்து, அடிப்படை வசதிகளை மேம்படுத்த 'தமிழ்நாடு கிராமப்புற குடியிருப்பு மேம்பாட்டுத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்காக (MGNREGS) 7,155 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 'ஒருங்கிணைந்த பள்ளிக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்' (Comprehensive School Infrastructure Development Scheme) கீழ், கிராமப்புறப் பகுதிகளிலுள்ள ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் புதிய கட்டடங்கள், சமையற் கூடங்கள், குடிநீர் வழங்கல், கழிவறைகள் முதலான அடிப்படை உட்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. 2016–2017 ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். பல்வேறு திட்ட நிதிகளை ஒருங்கிணைத்து சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான பணிகளை மேற்கொள்ள, 2015–2016 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட 'தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்', 2016–2017 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

✓ 'பிரதம மந்திரி கிராமப்புற சாலைகள் திட்டத்தின்' (PMGSY) பத்தாவது கட்டப் பணிகளாக 758.44 கோடி ரூபாய் செலவில் 573 சாலைகளின் மேம்பாட்டுப் பணிகளும், 22 பாலப் பணிகளும் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

✓ 'சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்' (MLACDS) கீழ், 2016–2017 ஆம் ஆண்டிற்கு 470 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஊரக வளர்ச்சித்

துறைக்கான ஒதுக்கீடு **21,186.58** கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

**நகராட்சி நிர்வாகம்**

✓ நகர்ப்புரங்களில் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்கும், அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும் **2011–2012** ஆம் ஆண்டில் 'ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டு இயக்கம்' (Integrated Urban Development Mission) மற்றும் 'சென்னைப் பெருநகர மேம்பாட்டு இயக்கம்' (Chennai Mega City Development Mission) ஆகிய முன்னோடித் திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். நிதி ஆதாரங்களை ஒருங்கிணைத்து தலா **500** கோடி ரூபாய் அளவில், இத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். நடைபெற்று வரும் பணிகள் உட்பட, ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டு இயக்கத்திற்காக **886** கோடி ரூபாயும், சென்னைப் பெருநகர மேம்பாட்டு இயக்கத்திற்காக **800** கோடி ரூபாயும் இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 'திறன்மிகு நகரங்கள் திட்டத்தின்' (Smart Cities) கீழ், சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்கள் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் ஐந்து ஆண்டுகளுக்கு, இந்த மாநகராட்சிகளுக்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் மத்திய அரசிடமிருந்து தலா **100** கோடி ரூபாய் நிதியுதவி கிடைக்கப் பெறும். இதற்குச் சமமான நிதியை மாநில அரசு தன் பங்காக வழங்கும்.

✓ 'அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டத்தின்' (Atal Mission for Rejuvenation and Urban Transformation) கீழ், **2015–2016** ஆம் ஆண்டில் **32** நகரங்களில் **3,316.22** கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், **2016–2017** ஆம் ஆண்டில் **3,834.49** கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. **2016–2017** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், திறன்மிகு நகரங்கள் திட்டத்திற்காக **400** கோடி ரூபாயும், அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டத்திற்கு **500** கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, **3,831** கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'தமிழ்நாடு நிலையான நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்' (Tamil Nadu Sustainable Urban Development Programme) தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், **2,212.89** கோடி ரூபாய் செலவில் எட்டு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் **13** திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கென, **2016–2017** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **399.39** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ இருபது பாதாள சாக்கடைத் திட்டங்கள் **14.41** இலட்சம் மக்களுக்குப் பயனளிக்கூடிய வகையில், **1,017.09** கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றுடன், 205.23 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மூன்று பாதாள சாக்கடைத் திட்டங்கள் ஒப்பந்தப் புள்ளி நிலையில் உள்ளன. இப்பணிகள் இவ்வாண்டில் தொடங்கப்படும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நகராட்சி நிர்வாகத்திற்கு மொத்தமாக 11,820 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஏழைகளுக்கான வீட்டுவசதி**

✓ ஏழைகளுக்கான வீட்டுவசதி வழங்கும் மாநில இயக்கத்தின் கீழ், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 10 இலட்சம் வீடுகளைக் கட்ட நடவடிக்கை எடுக்கும்.

✓ ‘பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின் (ஊரகம்)’ (Pradhan Mantri Awaas Yojana – Rural) கீழ், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடு ஒன்றுக்கு 70,000 ரூபாய் மதிப்பீட்டில் 45,788 வீடுகளை சிறப்பு ஒதுக்கீடாகவும், வீடு ஒன்றுக்கு 1.20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1,31,831 வீடுகளை வழக்கமான ஒதுக்கீடாகவும் மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் 40 சதவீதம் நிதிப் பகிர்வு மாநில அரசின் பங்காகும். எனினும், வீடுகளுக்கான நிதி ஒதுக்கீடு ஒரே சீராக இருக்கவேண்டும் என்ற நோக்கத்தில், கூரை அமைப்பதற்கு 50,000 ரூபாயை கூடுதலாக வழங்கி, அனைத்து வீடுகளுக்குமான மதிப்பீட்டுத் தொகையை வீடு ஒன்றுக்கு 1.70 இலட்சம் ரூபாயாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையுடன் உயர்த்தியுள்ளார்கள். எனவே, இத்திட்டத்தின் கீழ், கிராமப்புறப் பகுதிகளில் 3,095.62 கோடி ரூபாய் செலவில் 1,77,619 வீடுகளை 2016–2017 ஆம் ஆண்டிலேயே இந்த அரசு கட்டும். இதில், 1,908.47 கோடி ரூபாய் மாநில அரசின் பங்காக இருக்கும்.

✓ ‘மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சூரியஒளி மின்வசதி கொண்ட பசுமை வீடுகள் திட்டத்தின்’ கீழ், 2016–2017 ஆம் ஆண்டில் 420 கோடி ரூபாய் செலவில் 20,000 வீடுகள் கட்டப்படும்.

✓ குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களின் மறுவாழ்விற்காகவும், நகர்ப்புரத்தில் வாழும் வீடில்லா ஏழை மக்களுக்கு வீட்டு வசதி வழங்கவும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், கடந்த ஐந்து ஆண்டுகளில், 2,753.42 கோடி ரூபாய் செலவில், 59,023 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. மேலும், 10,537 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. 2016–2017 ஆம் ஆண்டில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலம், 23,476 வீடுகளைக் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது.

✓ மேலும், நகர்ப்புரங்களில் வாழும் ஏழைக் குடும்பங்களை மறுகுடியமர்த்துவதற்கான வீட்டுவசதித் திட்டங்களுக்கு நிதி வழங்க, ஒரு சிறப்பு நிதியமாக ‘வீட்டுவசதி நிதியத்தை’ (Shelter fund) இந்த அரசு ஏற்படுத்தும். ‘அனைவருக்கும் வீட்டு வசதி’ திட்டத்திற்காக, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 689 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தூய்மைத் தமிழகத்திற்கான இயக்கம்**

✓ ‘தூய்மை இந்தியா இயக்கத்தின் (ஊரகம்)’ கீழ் 2016–2017 ஆம் ஆண்டில் 7.66 இலட்சம் வீட்டுக் கழிவறைகளும், 50 பொது சுகாதார வளாகங்களும் கட்டப்படும்.

✓ கடந்த இரண்டு ஆண்டுகளில், 9,000 கிராம ஊராட்சிகளில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்துடன் இணைக்கப்பட்டு, ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

✓ 52,998 தூய்மைக் காவலர்கள் அமர்த்தப்பட்டு, 22,704 மூன்று சக்கர மிதிவண்டிகள் வழங்கப்பட்டு, அக்கிராமங்களில் குப்பைகளை சேகரித்தல், பிரித்தல் மற்றும் அகற்றுதல் பணியில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 2016–2017 ஆம் ஆண்டில், மீதமுள்ள 3,524 கிராம ஊராட்சிகளிலும், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, அனைத்து ஊரகப் பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மை நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

✓ மாநில அரசால் உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதியிலிருந்து, திடக்கழிவு மேலாண்மைக்காக 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

✓ தற்போது, 402 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் 833.22 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன. நகர்ப்புரங்களில் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும், திடக்கழிவு மேலாண்மையை சிறப்பாகச் செயல்படுத்துவதற்காகவும், ‘தூய்மை இந்தியா இயக்கத்தின் (நகர்ப்புரம்)’ கீழ் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ நகரங்களின் தூய்மையைப் பராமரிப்பதற்காக, 2016–2017 ஆம் ஆண்டுக்கு, திடக்கழிவு மேலாண்மை நிதிக்கு, மாநில நிதிப் பகிர்வு மானியத்திலிருந்து 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**குடிநீர் வழங்கல்**

✓ சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், தென்சென்னையில் உள்ள பேரூரில் 3,227.84 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் திறனும், நெம்மேலியில் 1,258.88 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறனும் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களையும் முறையே, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை (JICA) மற்றும் ஜெர்மன் பன்னாட்டு நிறுவனம் (KfW) ஆகியவற்றின் நிதியுதவியுடன் நிறுவுவதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் நடந்து வருகின்றன.

✓ திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள தேர்வாய்க் கண்டிகையில் புதிய நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்டப் பணிகளும், சோழவரம், நேமம், போரூர் மற்றும் அயனம்பாக்கம் ஆகிய நான்கு ஏரிகளைப் புனரமைக்கும் திட்டப் பணிகளும் நிறைவடையும் போது குடிநீர்த் தேவை மற்றும் வழங்குதலுக்கு இடையே உள்ள இடைவெளி கணிசமாகக் குறையும்.

இதன் மூலம், சென்னைக்கு குடிநீர் வழங்குவதற்கான மொத்த நீர்த்தேக்கக் கொள்ளளவு 1,474 மில்லியன் கன அடியிலிருந்து 2,542 மில்லியன் கன அடியாக உயர்த்தப்படும்.

✓ தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டத்திற்காக (National Rural Drinking Water Programme) 405.19 கோடி ரூபாயும், குறைந்தபட்ச தேவைகள் திட்டத்திற்காக (Minimum Needs Programme) 186.35 கோடி ரூபாயும், நபார்டு வங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தப்படும் குடிநீர்த் திட்டங்களுக்காக 450 கோடி ரூபாயும், 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ தற்போது, பதினொன்று முக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கான பணிகள் 2,888.26 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன. இத்துடன், 644.01 கோடி ரூபாய் செலவிலான 18 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்துவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

✓ 480.76 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 22 நகர்ப்புர குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 2016–2017 ஆம் ஆண்டில் 373.82 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நான்கு நகர்ப்புர குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வு**

✓ நான்காவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், மாநிலத்தின் சொந்த வரி வருவாயிலிருந்து கிராமப்புற மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடப்பு நிதியாண்டில் பகிர்ந்தளிப்பதற்காக முறையே, 4,995.66 கோடி ரூபாயும், 3,617.55 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ மேலும், பதினான்காவது மத்திய நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி, நமது மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொதுவான அடிப்படை நிதியுதவியாக 2,406.14 கோடி ரூபாயும், பொதுவான செயல்பாட்டு நிதியுதவியாக 494.99 கோடி ரூபாயும் நடப்பு நிதி ஆண்டில் கிடைக்கும். 2016–2017 ஆம் ஆண்டிற்கு, தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு மொத்தமாக 11,514.34 கோடி ரூபாய் நிதிக்குழுக்களின் நிதியுதவியாகக் கிடைக்கும். இது கடந்த ஆண்டைவிட 2,163.24 கோடி ரூபாய் அதிகமாகும்.

**உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள்**

✓ மகளிர் மேம்பாட்டின் முக்கியத்துவத்தைக் கருதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டினை 50 சதவீதமாக உயர்த்தியுள்ளார்கள்.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை

நடத்துவதற்காக 183.24 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம்**

✓ கோயம்பேட்டில் இருந்து ஆலந்தூர் வரையிலான 10.15 கிலோமீட்டர் நீளமுள்ள உயர்த்தப்பட்ட வழித்தடத்தில் ஏற்கெனவே பயணிகள் சேவைகள் தொடங்கப்பட்டுள்ள நிலையில், சின்னமலை முதல் விமான நிலையம் வரையிலும், ஆலந்தூர் முதல் பரங்கிமலை வரையிலுமான மீதமுள்ள உயர்த்தப்பட்ட வழித்தடங்களிலும் பயணிகள் சேவைகள் விரைவில் தொடங்கும். நடப்பாண்டு இறுதிக்குள், முதலாவது சுரங்க வழித்தடத்தில் பயணிகள் சேவைகள் தொடங்கப்படும்.

✓ வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் / விம்கோ நகர் வரையில், 3,770 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சென்னை மெட்ரோ இரயிலின் முதல் வழித்தடத்தை நீட்டிப்பதற்கு மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அயராத முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும். இந்த மெட்ரோ இரயில் நீட்டிப்புத் திட்டம் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் கடனுதவி சுழற்சித் திட்டத்தில் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், 104.50 கிலோமீட்டர் நீளமுள்ள இரண்டு வழித்தடங்களை உள்ளடக்கிய மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான திட்ட அறிக்கையை விரைவில் தயாரித்து செயலாக்கத்திற்கு இந்த அரசு கொண்டு வரும்.

**மக்கள் நல்வாழ்வு**

✓ அனைத்து மக்களும் பொது சுகாதார சேவையை எளிதில் பெறுவதை உறுதி செய்ய, 2016–2017 ஆம் ஆண்டில் இந்த அரசு 37 ஆரம்ப சுகாதார நிலையங்களைப் புதிதாக அமைப்பதுடன், ஏற்கெனவே இயங்கிவரும் 24 ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தும்.

✓ கடலூர் மற்றும் திருப்பூரில் தலா 20 கோடி ரூபாய் செலவில் புதிய மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவுகளை ஏற்படுத்துவது; தலா 10 கோடி ரூபாய் செலவில் தாம்பரம், கிருஷ்ணகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் உள்ள விபத்து சிகிச்சை மையங்களை வலுப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்காக, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 'தேசிய சுகாதாரத் திட்டத்தின்' (National Health Mission) கீழ் 1,423.38 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ அரசு மருத்துவமனைகளில் இரண்டாம் நிலை (Secondary) மற்றும் உயர்நிலை மருத்துவ வசதிகளை (Tertiary Health care) மேம்படுத்துவதற்காக, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன் 1,634 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 'தமிழ்நாடு நகர்ப்புர மருத்துவக் கட்டமைப்புத் திட்டத்தை' இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், ஏழு மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும்

நான்கு இதர அரசு மருத்துவமனைகளுக்கு உலகத் தரம் வாய்ந்த நோய் கண்டறியும் கருவிகள் மற்றும் கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டு, அவற்றின் செயல்திறன் வலுப்படுத்தப்படும்.

✓ 'மரணமடைந்தவர்களின் உடல் உறுப்புகளைப் பயன்படுத்தி, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில்' மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, நாட்டிலேயே முதன்மை மாநிலம் என்ற தேசிய விருதினை தமிழ்நாடு பெற்றுள்ளது. இதுவரை, 828 உடல் உறுப்பு கொடையாளிகளிடமிருந்து 2,652 முக்கிய உறுப்புகள் தானமாகப் பெறப்பட்டு நோயாளிகளுக்குப் பொருத்தப்பட்டுள்ளன.

✓ 'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்', 3,192 கோடி ரூபாய் செலவில் 15.41 இலட்சம் நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர். இத்திட்டத்தில் அரசு மருத்துவமனைகள் இதுவரை ஈட்டியுள்ள 1,138 கோடி ரூபாய் வருவாய் மூலம் மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 928 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ மாநிலத்தில் சிசு இறப்பு விகிதம் மற்றும் மகப்பேறு இறப்பு விகிதங்களை குறைப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்' கீழ் 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை, 34.57 இலட்சம் கர்ப்பிணிப் பெண்கள் 3,239 கோடி ரூபாய் நிதியுதவி பெற்று பயனடைந்துள்ளனர். 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்காக 668 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆண்டொன்றுக்கு 61 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன், மகளிர் சுகாதாரத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

✓ இந்த அரசின் புதுமையான நலத் திட்டங்களான 'அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம்', 'அம்மா மகப்பேறு சஞ்சீவி' மற்றும் 'அம்மா ஆரோக்கியத் திட்டம்' ஆகியவையும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மக்கள் நல்வாழ்வுத் துறைக்காக 9,073 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளிக் கல்வி**

✓ ஆசிரியர்–மாணவர் விகிதாச்சாரம், தொடக்கப் பள்ளிகளில் 1 : 25 ஆகவும், நடுநிலைப் பள்ளிகளில் 1 : 24 ஆகவும், உயர்நிலைப் பள்ளிகளில் 1 : 26 ஆகவும், மேல்நிலைப் பள்ளிகளில் 1 : 37 ஆகவும் மேம்படுத்தப்பட்டு, தேசிய அளவுகோலான, முறையே 1 : 30, 1 : 35, 1 : 40 மற்றும் 1 : 45 என்ற விகிதாச்சாரங்களைவிட சிறப்பாக உள்ளன.

✓ கடந்த ஐந்தாண்டுகளில் மேற்கொண்ட முயற்சிகளின் தொடர்ச்சியாக, 2016–2017 ஆம் ஆண்டில் 59.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 4,339 கழிவறைகள் அமைத்துத் தரப்படும்.

கழிவறைகளைப் பராமரிப்பதற்காக மட்டும், **2015–2016** ஆம் ஆண்டில் **57.63** கோடி ரூபாயை உள்ளாட்சி அமைப்புகள் மூலம் வழங்கி, அனைத்துப் பள்ளிகளிலும் உள்ள கழிவறைகள் சுத்தமாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்ற நெடுநாள் தேவையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவு செய்துள்ளார்கள்.

✓ நபார்டு வங்கிக் கடன் உதவியுடன் வகுப்பறைகள், கழிவறைகள் மற்றும் குடிநீர் வசதிகள் போன்ற பள்ளிக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக, இந்த திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **333.61** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ ‘குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்’ கீழ், சமுதாயத்தில் பின்தங்கிய மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவுகளைச் சார்ந்த **2,31,404** குழந்தைகள் இதுவரை தனியார் பள்ளிகளில் கல்வி பயின்றிட இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. நடப்பாண்டில், **86,199** குழந்தைகள் தனியார் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதற்காக, இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **125.70** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ ‘அனைவருக்கும் கல்வி இயக்கம்’ (Sarva Shiksha Abhiyan), ‘அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கம்’ (Rashtriya Madhyamik Shiksha Abhiyan) ஆகியவற்றிற்கு **2015–2016** ஆம் ஆண்டுக்குரிய மத்திய அரசின் பங்குத் தொகையான **848** கோடி ரூபாய் இதுவரை வரப்பெறாத நிலையிலும், இந்த இயக்கங்கள் திறம்பட செயல்படுவதை உறுதி செய்வதற்கு மாநில அரசே தேவையான நிதியை தொடர்ந்து வழங்கி வருகிறது. **2016–2017** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், அனைவருக்கும் கல்வி இயக்கத்திற்காக **2,329.15** கோடி ரூபாயும், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கத்திற்காக **1,139.52** கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ இந்த அரசு, மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினிகள், விலையில்லா பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், கல்வி உபகரணங்கள், நான்கு சீருடைத் தொகுப்புகள், காலணிகள், புத்தகப் பைகள், பேருந்துக் கட்டணச் சலுகைகள், மிதிவண்டிகள் போன்றவற்றைத் தொடந்து வழங்கும். இதற்காக, **2016–2017** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **2,705** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ அரசு மேற்கொண்ட இம்முயற்சிகளின் விளைவாக, இடைநிற்றல் விகிதம் தொடக்க நிலையில் **0.90** அளவாகவும், நடுநிலையில் **1.55** அளவாகவும், இடைநிலையில் **3.76** அளவாகவும் **2015–2016** ஆம் ஆண்டில் குறைந்துள்ளது.

✓ மாணவிகளின் இடைநிற்றலை மேலும் குறைக்கும் திட்டத்திற்காக, **2016–2017** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **381** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ பள்ளிக் கல்விக்காக, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்தமாக 24,130 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

**உயர்கல்வி**

✓ உயர்கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதம் 44.80 சதவீதமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக, பெண்கள் மற்றும் ஆதிதிராவிடர் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களின் உயர்கல்விச் சேர்க்கை 2010–2011 ஆம் ஆண்டில் முறையே 2,51,211 மற்றும் 84,660 ல் இருந்து, 2015–2016 ஆம் ஆண்டில் முறையே 3,01,110 மற்றும் 1,36,877 ஆக உயர்ந்துள்ளது.

✓ கல்வியில் பின்தங்கிய குடும்பங்களிலிருந்து உயர்கல்வி பயிலும் மாணவ மாணவியர்களை ஊக்குவிக்க, முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்குக் கல்விக் கட்டணத்தைத் திரும்ப வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 582.58 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 233 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு 152.97 கோடி ரூபாய் உட்பட, அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் மானியம் வழங்குவதற்காக, திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்தமாக இந்த அரசு 357.12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், உயர்கல்வித் துறைக்கென மொத்தமாக 3,679.01 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு**

✓ உதகமண்டலத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "மலை மேலிட விளையாட்டு பயிற்சி மையம்" அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இது தவிர, 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை வேளச்சேரியில் உள்ள நீச்சல் வளாகத்தின் சீரமைப்புப் பணி நடைபெற்று வருகின்றது.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், விளையாட்டு மற்றும் விளையாட்டு தொடர்பான பணிகளுக்கென 153.39 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்**

✓ இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஆதிதிராவிடர் துணைத் திட்டத்திற்கு (Scheduled Castes Sub Plan) 12,462 கோடி ரூபாயும், பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கு (Tribal Sub Plan) 722 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவை, ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டில் முறையே 20.56 மற்றும் 1.19 சதவீதங்களாகும்.

✓ தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளில், 81 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன.

மீதமுள்ள 24 விடுதிகளுக்கான புதிய கட்டடங்கள் கட்டும் பணிகள் 27.48 கோடி ரூபாய் செலவில் இந்த அரசால் மேற்கொள்ளப்படும்.

✓ அடுத்த இரண்டு ஆண்டுகளில், அனைத்து விடுதிகளுக்கும் இட்லி குக்கர்–நீராவிக் கொதிகலன்கள் மற்றும் சலவை இயந்திரங்களை இந்த அரசு வழங்கும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், உணவு வழங்குவதற்கான தொகையாக 103.15 கோடி ரூபாயும், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் விடுதிப் பராமரிப்புக்காகவும் 83.80 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண் குழந்தைகளின் பள்ளிச் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்கும் நோக்குடன், பள்ளிகளில் பயிலும் பெண் குழந்தைகளுக்கு ஊக்க உதவித் தொகை வழங்குவதற்காக 2016–2017 ஆம் ஆண்டில் 55.11 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ உயர்கல்வி உதவித்தொகைத் திட்டத்தை தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களுக்கும் நீட்டித்ததன் பலனாக, 2015–2016 ஆம் ஆண்டில் 7.76 இலட்சம் மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வி உதவித் தொகைத் திட்டங்களுக்கு முறையே 75.61 கோடி ரூபாயும், 1,429.94 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்திட இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 64.86 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கு மத்திய சிறப்பு உதவித் திட்டத்தின் (Special Central Assistance) கீழ், 130 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ ‘ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக’ (Comprehensive Tribal Development Programme), 50 கோடி ரூபாய் இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

✓ 12 கோடி ரூபாய் செலவில், நபார்டு வங்கி கடனுதவியுடன் வனத்துறையால் நடத்தப்படும் பழங்குடியினருக்கான பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

✓ மாநிலத்தில் வாழும் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக 28.80 கோடி ரூபாயும், ‘வனபந்து கல்யாண் யோஜனா திட்டத்தைச்’ செயல்படுத்துவதற்காக 7 கோடி ரூபாயும் இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்**

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 6.96 இலட்சம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியர்களுக்கு, பள்ளிக் கல்விக்கான உதவித்தொகை வழங்க 21.40 கோடி ரூபாயும், உயர்கல்விக்கான உதவித் தொகை வழங்க 186.56 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 36 விடுதிகளுக்கு 2016–2017 ஆம் ஆண்டில் 76.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்பட்டு, அனைத்து விடுதிகளும் அரசுக் கட்டடங்களில் இயங்கும் நிலை உறுதி செய்யப்படும். அடுத்த இரண்டு ஆண்டுகளில், அனைத்து விடுதிகளுக்கும் இட்லி குக்கர்–நீராவிக் கொதிகலன்கள் மற்றும் சலவை இயந்திரங்கள் வழங்கப்படும். 2016–2017 ஆம் ஆண்டில் உணவு வழங்குவதற்கான தொகையாக 70.64 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

✓ அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பதினொன்றாவது வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் இதர பிரிவுகளைச் சேர்ந்த மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை இந்த அரசு வழங்கி வருகிறது. இத்திட்டத்திற்காக இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 168.04 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இயங்கிவரும் 290 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்காக இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 104.40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நலன்**

✓ இதுவரை பல்வேறு அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் 66.97 இலட்சம் தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பிற மாநிலங்களைச் சேர்ந்த 16,684 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

✓ 2015–2016 ஆம் ஆண்டில் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் உறுப்பினர்கள் 125.90 கோடி ரூபாய் அளவிற்கான சமூகப் பாதுகாப்பு பலன்களைப் பெற்றுள்ளனர்.

✓ இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களுக்கு மானியம் வழங்குவதற்காக 70 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இத்துறைக்காக, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 152.76 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சமூக நலன்**

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ‘பெண் குழந்தைகள்

பாதுகாப்புத் திட்டம்', 'தொட்டில் குழந்தைத் திட்டம்' போன்ற முன்னோடித் திட்டங்களுக்காக 140.50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

✓ திருமண உதவித் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் திருமாங்கல்யத்திற்கான தங்கத்தை எட்டு கிராமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே உயர்த்தியுள்ளார்கள். இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், அனைத்து திருமண உதவித் திட்டங்களுக்காகவும் 703.16 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின்' கீழ், ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம் வழங்கப்பட்டு, தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 26.88 இலட்சம் குழந்தைகளும், நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் 28.17 இலட்சம் குழந்தைகளும் பயனடைந்து வருகின்றனர். இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சத்துணவுத் திட்டத்திற்காக 1,644.52 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 'ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்' (ICDS) கீழ், 6 முதல் 36 மாதங்கள் வரை உள்ள 17.63 இலட்சம் குழந்தைகளுக்கும், 2 முதல் 5 வருடங்கள் வரை உள்ள 13.97 இலட்சம் குழந்தைகளுக்கும், 6.55 இலட்சம் கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், 4.02 இலட்சம் வளரிளம் பெண்களுக்கும் ஊட்டச்சத்து மிக்க உணவு வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக 1,699.79 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சமூகப் பாதுகாப்பு உதவித்தொகைத் திட்டங்களுக்காக 3,820 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சமூகநலத் துறைக்காக 4,512.32 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன்**

✓ அரசு அலுவலர்கள் மற்றும் அவர்களின் தகுதி வாய்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு, 01.07.2016 முதல் மேலும் நான்கு ஆண்டுகளுக்கு மருத்துவ சிகிச்சைகளை வழங்குவதற்காக, 'புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்–2016–ஐ' செயல்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம், அலுவலர்களுக்கும், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் நான்காண்டுகளில் நான்கு இலட்சம் ரூபாய் வரை சிகிச்சை பெற வகை செய்கிறது. தற்போது நீட்டிக்கப்பட்ட இத்திட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாக, சில குறிப்பிட்ட சிகிச்சைகளுக்கு மட்டும் உச்சவரம்புத் தொகை 7.50 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக, இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

✓ ஏழாவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஆராய்ந்து, அனைத்து

அம்சங்களுக்கும் மத்திய அரசு முழுமையாக ஒப்புதல் அளித்த பின்னர், அவற்றை ஆய்வு செய்து, தமிழக அரசு அலுவலர்களுக்கு புதிய ஊதிய விகிதத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து, தகுந்த பரிந்துரைகளை அளிப்பதற்காக இந்த அரசு, உயர் அலுவலர்கள் குழுவினை அமைக்கும்.

✓ 2016–2017 ஆம் ஆண்டிற்கு விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்காக 129 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஓய்வூதியம் மற்றும் ஓய்வுகாலப் பலன்களுக்காக, 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 18,868 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இலங்கைத் தமிழ் அகதிகள் நலன்**

✓ 2016–2017 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இலங்கைத் தமிழ் அகதிகள் நலனுக்காக 105.98 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாற்றுத் திறனாளிகள் நலன்**

✓ மாற்றுத் திறனாளிகளின் நலத்திற்காக, 435 சிறப்புப் பள்ளிகள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. செவித்திறன் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் (Early Intervention Centres), தகுதி வாய்ந்த ஆசிரியர்களுடன் 29 மாவட்டங்களிலும், மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான மையங்கள் 31 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

✓ 2016–2017 ஆம் ஆண்டில், இரு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட விலையில்லா 1,000 பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்படும். 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக 396.74 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறுபான்மையினர் நலன்**

✓ உலமாக்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித்தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

**வரவு–செலவுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள்**

✓ கடந்த மூன்று ஆண்டுகளில், பெட்ரோலியப் பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைக்கக்கூடிய விற்பனை வரி வருவாயில் தேக்க நிலை காணப்படுவது மட்டுமல்லாமல், 2015–2016 ஆம் ஆண்டில் இதன் வளர்ச்சி வீழ்ச்சி கண்டுள்ளது.

✓ இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 72,326.45 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட வணிக வரிகள், 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 67,629.45 கோடி ரூபாயாக குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.

✓ டாஸ்மாக் மூலம் நடத்தப்படும் 500 மதுபானக் கடைகளை மூட அரசு முடிவெடுத்து, அதை செயல்படுத்தியுள்ளதால், நடப்பு

நிதியாண்டில் மாநில ஆயத்தீர்வை மூலம் கிடைக்கும் வருவாய் **6,636.08** கோடி ரூபாயாக குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.

✓ **2016–2017** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், முத்திரைத் தாள்கள் மற்றும் பதிவுக் கட்டணங்களின் கீழ் கிடைக்கும் வருவாய் **9,858.17** கோடி ரூபாய் எனவும், வாகனங்கள் மீதான வரி வருவாய் **4,793.91** கோடி ரூபாய் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

✓ **2016–2017** ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த மாநில சொந்த வரி வருவாய் **90,691.87** கோடி ரூபாயாக இருக்கும் என திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மதிப்பிடப்பட்டுள்ளது.

✓ மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய் **9,723.95** கோடி ரூபாய் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

✓ **2016–2017** ஆம் ஆண்டிற்கான மத்திய வரவு–செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தொகையின் அடிப்படையில் இந்த ஆண்டிற்கான மத்திய வரிகளில் மாநில அரசின் பங்குத் தொகை **23,018.12** கோடி ரூபாயாக குறைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் உதவி மானியங்கள் **24,741.15** கோடி ரூபாய் என கணிக்கப்பட்டுள்ளது.

**நிதிநிலைக் குறியீடுகள்**

✓ இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், **1,52,004.23** கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்ட மொத்த வருவாய் வரவுகள் **2016–2017** ஆம் ஆண்டின் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **1,48,175.09** கோடி ரூபாயாக இருக்குமென தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது.

✓ எனினும், சிறு குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள விவசாயக் கடன் தள்ளுபடி மற்றும் அனைத்து வீடுகளுக்கும் **100** யூனிட் வரை கட்டணமில்லா மின்சாரம் போன்ற புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதாலும், ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வந்த பல்வேறு நலத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்த உள்ளதாலும் மாநிலத்தின் செலவுகள் அதிகரித்துள்ளன.

✓ இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **1,61,159.01** கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்ட வருவாய் செலவினங்கள் **2016–2017** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **1,64,029.56** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக, நடப்பு நிதியாண்டிற்கான வருவாய்ப் பற்றாக்குறை **15,854.47** கோடி ரூபாயாக திருத்தி மதிப்பிடப்பட்டுள்ளது.

✓ **2016–2017** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நிதிப் பற்றாக்குறை **40,533.84** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் **2.96** சதவீதமாகும். இது, தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டம், **2003**–ல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைக்கு உட்பட்டே உள்ளது.

✓ மாநில மொத்த உற்பத்தி மதிப்பை கணக்கிடுவதற்கு **2011–2012** ஆம் ஆண்டு புள்ளி விவரங்களை அடிப்படை ஆண்டாக மத்திய அரசு மாற்றியமைத்துள்ளதால், **2016–2017** ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த நிகரக் கடன் பெறுவதற்கான வரம்பும் **41,085** கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

✓ ஆனால், திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பெறப்படும் நிகரக் கடன் அளவு **40,529** கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் மாநிலத்தின் ஒட்டுமொத்தக் கடன் நிலுவை **2,52,431** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. **2016–2017** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, நடப்பு நிதியாண்டின் இறுதியில் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் மொத்த நிலுவைக் கடனின் விகிதம் **18.43** சதவீதமாக மட்டுமே இருக்கும்.